THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL.

Tuesday, the 25th January 1972.

The House met in the Council Chamber, Fort St. George, at four of the clock, MR. CHAIRMAN (THE HON. THIRU C. P. CHITRARASU) in the Chair.

I. FELICITATIONS TO THE HON. THE MINISTER FOR EDUCATION AND LOCAL ADMINISTRATION ON THE CONFERMENT OF THE DOCTORATE DEGREE ON HIM BY THE MADURAI UNIVERSITY.

மிஸ்டர் சேர்மன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்குச் சென்ற 23—1—1972 ஞாயிறு மதுரைப் பல்கலைக் கழகத்தில் பாராட்டளித்த டாக்டர் பட்டத்திற்காக இம்மாமன்றம் தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது. (கை தட்டல்) நாவலர் அவர்களே, நீங்கள் தமிழுக்காகவும், தமிழர்க்காகவும், செய்து கொண்டிருக்கின்ற இலக்கிய சேவைக்காக, தமிழ் ஆய்வதற்காக, தமிழின் மேன்மையை உலகம் அறிந்து தமிழ் மொழி தமிழர்க்கே அல்லாது எங்களுக்கும் சொந்தம் என பிற நாட்டார் போற்றி வளர்ப்பதற்குக் காரணமாயிருந்த சங்கம் அமைத்த மதுரையில், அதை ஒரு காலத்தில் ஆண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் பெயரையே தாங்கி, இருபதாம் நூற்றாண்டின் நெடுஞ்செழியன் தங்களுக்கு பட்டமளித்து, தக்கோரைச் சிறப்பிப்பது தமிழரின் கடமை என்ற முடிவில் தங்களைப் பாராட்டியிருக்கிறது.

தமிழகத்தின் கல்வி அமைச்சர் என்பதால் மட்டுமே அல்லாமல் சுமார் முப்பது ஆண்டுகளாக தாங்கள் இலக்கியத்திற்குச் செய்த சேவையை, மேடைகளில் ஒரு மொழியின் தேவை, சிறப்பு இயல்பு என்பவைகளை ஆயிரக்கணக்கான ஆதாரங்களைக் காட்டி ஆற்றிய பேருரையால் உங்களைத் தமிழகமும் அதன் அறிவாலயங்களும் மறக்கவில்லை, மறக்காது என்பதையே நீங்கள் பெற்ற பட்டம் காட்டுகிறது. அந்த வகையில் நீங்கள் பெற்ற சிறப்பு எங்களுடையது என எண்ணி இம்மாமன்றம் நீங்கள் நீடுழி வாழவும், உங்கள் அரசியல் இலக்கியப் பணி மேன்மேலும் சிறக்கவும் பாராட்டுகிறது. (கை தட்டல்).

II. QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Clash between the Students and the Workers of the State Transport Department.

* 16 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM AND THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that there was a clash between the students and the workers of the State Transport Department at Anna Nagar, Madras, on 17th August 1971; and

(*b*) if so, the details thereof?

[25th January 1972

மாணவர்களுக்கும் அரசு பேருந்து தொழிலாளர்களுக்கும் கை கலப்பு

திரு. பி. திருஞானசம்பந்தம்:

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சென்னை அண்ணு நகரில் மாணவர்களுக்கும் அரசு பேருந்து தொழிலாளர்களுக்கும் 17—8—1971-ஆம் நாள் கை கலப்பு ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: (அ) ஆம்.

(இ) சென்னை, அண்ணு நகரின் அருகிலுள்ள கந்தசாமி நாயுடு கல்லூரியைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கும், அரசுப் போக்குவரத்துப் பேருந்து ஒன்றில் பயணித்துணை வலவர் ஆகியோருக்கும் இடையே 16—8—1971-ல் தகராறு நடந்தது. இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து அடுத்த நாள், அதாவது 17—8—1971-ல் கந்தசாமி நாயுடு கல்லூரி முன்பு அரசுப் பேருந்து நின்றபோது அந்தப்பேருந்தின் மீது கற்களை எறிந்ததாகக் கூறப்படுகிறது. இதனுல் வலவர் மற்றும் பயணி ஒருவர் ஆகியோர் காயமடைந்தனர். பேருந்துக்கும் சேதம் ஏற்பட்டது. பேருந்து சேருமிடத்திற்கருகில் இருந்த அரசு போக்குவரத்துத் துறைப் பணியாளர்கள் ஆரவாரம் செய்து கொண்டு அங்கிருந்த மாணவர்களைத் துரத்திச் சென்றதாகவும் கல்லூரி வளவுக்குள் நுழைந்து கற்களை எறிந்ததாகவும் கூறப்பட்டது. சில மாணவர்கள் காயமடைந்தனர். கல்லூரிக் கட்டிடத்தின் சாரளக் கண்ணுடிகள் உடைக்கப்பட்டன. கல்லூரி முதல்வர் வேண்டிக்கொண்டதன் மேல் பேருந்து சேருமிடத்திற்குப் பேருந்துப் பணியாளர்கள் பிறகு திரும்பிச் சென்றுர்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் அடிக்கடி இப்படிப்பட்ட கை கலப்புகள் ஏற்படுவதற்குக் காரணம் என்ன? சுமார் ஐந்தாண்டுகளில் எத்தனை முறை இந்தக் கை கலப்புகள் ஏற்பட்டிருக்கும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: காரணம், அவர்களுக்குள்ளே பொறுமை இன்மைதான். எத்தனை கை கலப்புகள் ஏற்பட்டன என்கிற விவரம் என்னிடத்தில் இல்லை. அந்த விவரங்களை ஆராய்ந்துகொண்டிருப்பதும் அவசியமில்லை.